செ.வெ.எண் : 56 / ஆகஸ்ட் நாள் : 30.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## நயினார்கோயில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் வேளாண்மைத்துறை மற்றும் மாவட்ட ஊரகவளர்ச்சி முகமையின் சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு வளர்ச்சிப் பணிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரடியாக சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோயில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் இன்று (30.08.2017) வேளாண்மைத்துறை மற்றும் மாவட்ட ஊரகவளர்ச்சி முகமையின் சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நயினார்கோயில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நயினார்கோயில் ஊராட்சியில் உள்ள மருதூர் கண்மாய்க்கான வரத்துக்கால்வாயினை புனரமைத்து எதிர்வரும் மழைக்காலத்தில் மழைநீரினை சேமித்திட ஏதுவாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதித் திட்டத்தின் கீழ் ரூ.6 இலட்சம் மதிப்பில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சீரமைப்பு பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் எனவும், தேவை ஏற்படும் பட்சத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதித் திட்ட பணியாளர்களோடு கூடுதலாக ஜேசிபி போன்ற கனரக இயந்திரங்களையும் பயன்படுத்தி விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

அதேபோல வேளாண்மைத்துறையின் மூலம், விவசாயிகள் தரமான விதைகளைப் பெற்று பயனடையும் வகையிலும், விதைப்பண்ணை அமைத்திட விவசாயிகளை ஊக்குவித்திடும் வகையிலும் 50 சதவீத மானிய விலையில் தரமான விதைகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் கள்ளியடியேந்தல் கிராமத்தைச் சேர்ந்த திரு.முனியையா என்பவர் தனக்கு சொந்தமான 3 ஏக்கர் நிலத்தில் CO (R) - 14 ரக கேழ்வரகு பயிரிட்டு விதைப்பண்ணை அமைத்துள்ளார். இதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் கேழ்வரகு விதைகளை தர ஆய்வு செய்து அருகில் உள்ள வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளின் உழவுப்பணிகளுக்கு தரமான கேழ்வரகு விதைகள் வழங்கப்படுகின்றன. இன்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இவ்விதைப்பண்ணைக்கு நேரடியாக வந்து பண்ணைப் பராமரிப்பு முறைகள் மற்றும் இதனால் பெறும் பயன்கள் குறித்து சம்பந்தப்பட்ட விவசாயிடம் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, கங்கை கொண்டான் கிராமத்தில் பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் ரூ.4.75 கோடி மதிப்பில் புதிதாக கொள்ளனூர் பாலம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பாலத்திற்கான கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பணிகளை துரிதப்படுத்தி விரைந்து முடித்திட வேண்டும் என அலுவலர்களிடத்தில் அறிவுறுத்தினார்.

மேலும் நயினார்கோயில் ஊராட்சி ஒன்றியம், பொட்டகுடி, வயலூர் ஆகிய கிராமங்களில் உள்ள கண்மாய்களில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேலாண்மை (வேளாண்த்துறை) சார்பாக தலா ரூ.1.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.3 இலட்சம் மதிப்பில் நீர்பிடி பகுதிகளை ஆழப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேவேளையில் இவ்விரு கண்மாய்களிலும் தலா ரூ.60 ஆயிரம் மதிப்பில் நீர் செறிவூட்டும் தண்டு (Recharge pit) அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மழைக்காலத்தில் கண்மாய்களில் நீர் நிரம்பும் வேளையில் நிலத்தடி நீர் மட்டமும் உயரும் சூழ்நிலை ஏற்படுகின்றது. இந்த கண்மாய் சீரமைப்பு பணிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரடியாக கள ஆய்வு செய்தார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் காரேந்தல் கிராமத்தில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேலாண்மை முகமையின் சார்பாக ஒருங்கிணைந்த பண்ணைகள் இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ் 8 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.88 ஆயிரம் மதிப்பிலான மானியத்துடன் கூடிய வேளாண் உபகரணங்களை வழங்கினார்.

இந்த ஆய்வுகளின் போது வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.ஆர்.அரிவாசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திருமதி.சிவராணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.பெ.ராஜா, மாவட்ட நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்ட உதவி இயக்குநர் திரு.பாஸ்கரமணியன் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**